1982 பிப்ரவரி 2]

கப்பலூரில் உபமின்நிலையம் நிறுவும் திட்டம்.

*வினா எண் 2—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருமங்கலம் அருகே கப்பலூரில் மின்சார உபநிலையம் Sub-Station துவங்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) அண்ட் (ஆ) : தென் மதுரையிலும் திருமங்கலம் வட்டாரங்களிலும் உள்ள பசுமலை, திருமங்கலம், கப்பலூர் மற்றும் செக்கானூரணி ஆகிய இடங்களை இணைத்து கப்பலூரில் 110 கி.வா. உப மின் நிலையம் ஒன்று நிறுவ ஊரக மின கழகம் (R.E.C) திட்டம் சீர்ப்படுத்தல் பிரிவின் கீழ் பிப்ரவரி 1981-ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதற்காக ஊரக மின் கழகம் ரூபாய் 58·743 லட்சம் கடன் வழங்கியுள்ளது.

திரு. செ. சிவசாமி : தலைவர் அவர்களே, மின் உற்பத்தி செய்வதற்குத் தனியார் யாருக்காவது லைசன்சு கொடுக்கப்பட்டு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

[முற்பகல் 10–30]

திருவில்லிபுத்தூர் யூனியனில் பட்டு நூற்பு தொழிற் கூட்டுறவு சங்கம் அமைக்கும் திட்டம்.

*வினா எண் 3—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருவில்லிபுத்தூர் யூனியனில் பட்டு நூற்பு தொழிற் கூட்டுறவுச்சங்கம் ஆரம்பிக்க விவசாயிகளிடம் இருந்து கோரிக்கை மனு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எந்த அளவில் உள்ளது?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) ஆம்.

(ஆ) திருவில்லிபுத்தூர் பட்டு விவசாயிகள் மற்றும் பட்டு நூற்பு தொழிற் கூட்டுறவு சங்கம் 1981 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 2 ஆம் நாள் அன்று பதிவு செய்யப்பட்டு 1981-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 6 ஆம் நாள் முதல் அங்கு செயல்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, நமது நாட்டுப் பட்டுப் பூச்சிகளை வளர்ப்பதன் மூலமாக ஒரு ஏக்கருக்கு 10,000 கூடுகள அல்லது 400 கிலோ பட்டு நூல் கிடைக்கிறது என்றும், ஜப்பான் நாட்டுப் பூச்சிகளை வளர்த்தால் ஒரு ஏக்கருக்கு 17,000 கூடுகள் அல்லது 700 கிலோ பட்டு நூல் கிடைக்கிறது என்றும் கூறப்படுகிறது. ஆகவே, ஜப்பான் பட்டுப் பூச்சிகளை அதிக அளவில் உற்பத்தி செய்து, ஏற்றுமதி செய்யும் திட்டம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் யோசனையைப் பரிசீலித்து, அது உகந்ததாக இருந்தால் செயல்படுத்தப்படும்.

திரு இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப்பூச்சி வளர்ப்பு பற்றி விவசாயிகள் அறிவதற்காக சினிமாப் படம் எடுக்கப்படும் என்று முன்பொருமுறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அந்தத் திட்டம் எந்த அளவில் உள்ளது ?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்மிகு தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் தற்போது என்னிடத்தில் இல்லை. தனிக்கேள்வி போடவும்.

கொமாரபாளையத்தில் நிறுவப்படும் பால் குளிரூட்டும் நிலையம்.

*வினா எண் 4—திரு. ஆர். அரங்கசாமி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) சத்தியமங்கலம் தொகுதி, கொமாரபாளையம் கிராமத்தில் தேசிய பால்வள நிறுவனத்தின் மூலம் அமைக்கப்படும் பால் குளிரூட்டும் நிலையத்தின் மதிப்பீடு என்ன ?

(ஆ) நாள் ஒன்றுக்கு எத்தனை லிட்டர் பால் சேமிக்க முடியும் ?

(இ) எப்பொழுது இந்த நிலையம் வேலையைத் தொடங்கும் ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) சத்தியமங்கலம் தொகுதி கொமாரபாளையத்தில் நிறுவப்படும் குளிரூட்டும் நிலையத்தின் மதிப்பீடு ரூபாய் 24.875 இலட்சங்கள் ஆகும்.

(ஆ) இக்குளிரூட்டு நிலையம் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் பாலை குளிர்ப்படுத்தும் திறனுடையது.

(இ) இக்குளிரூட்டு நிலையத்தின் கட்டிட வேலை சிறிது காலத்திற்குள் கட்டி முடிக்கப் பெற்று செயல்படத் துவங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.